**04.12.2024.** CC. 172/2024 PW.2 Thiru. Belgin Jose

**கடந்த 23.10.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2024, dated 20.11.2024 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அன்றையதினம் நாங்கள் 7 கைதிகளை கூட்டி வந்தோம் என்றால் சரிதான். ஒவ்வொரு கைதிக்கும் ஒரு பாதுகாவல் என்ற முறையில் வந்தோம் என்றால் இல்லை, மொத்தமாக வந்தோம். நீதிமன்ற பணி முடித்து எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 4.00 மணியிருக்கும், சரியாக ஞாபகமில்லை.

2. நீதிமன்றத்திற்கு சிறை கைதிகளை அழைத்து வருவது எங்கள் பணி என்று சொன்னால் சரிதான். அன்றையதினம் மேற்படி கைதிகளுக்கான நடவடிக்கைகள் முடிந்த பிறகு தான் நாங்கள் அழைத்துச் சென்றோம் என்றால் சரிதான். அன்றையதினம் எல்லா வேலைகளையும் முடித்து தான் சென்றோம் என்றால் சரிதான். எத்தனை நண்பர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பார்க்க வந்தார்கள் என்றால் எத்தனை நபர்கள் என்று ஞாபகமில்லை, 3 முதல் 6 வரை வந்திருப்பார்கள்.

3. நீதிமன்றத்தில் பொருததப்பட்டிருக்கும் CCTV camera வில் அவர்கள் முகம் பதிவாகியிருக்கும் என்று சொன்னால் சரிதான். எனக்கு மேற்படி கைதிகளின் நண்பர்களை அடையாளம் தெரியும் என்றால் தெரியாது. நான் அவர்களை நேரடியாக பார்த்தேனா என்றால்- ஆம் பார்த்தேன். நான் உண்மையிலேயே அவர்களை பார்த்திருந்தால் அடையாளம் காட்டமுடியும் என்றால் நான் அவர்களை பார்ப்பதைவிட கைதிகளை பார்ப்பது தான் எனக்கு முக்கியம்.

4. நான் சொல்வது போல் அன்றையதினம் நண்பர்கள் யாரும் வரவில்லை என்றாலும், அ.சா1 க்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அன்யைதினம் கைவிலங்கு போட்டுதான் கூட்டிக்கொண்டு வரப்பட்டார்கள் என்றால் இல்லை. மேற்படி சம்பவம்தொடர்பாக நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்தோமா என்றால் அ.சா1 தெரிவித்ததாக சொன்னார். மேற்படி பிரச்சினை நண்பர்கள் வந்ததால் தான் என்று சொன்னார் என்றால் ஆம்.

5. அன்றையதினம் 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் எழுத்துமூலமாக நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில்

அன்றையதினம் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கைவிலங்கிட்டு அன்றையதினம் நீதிமன்றத்தில் அவர்கள் மீதான வழக்கை அழைத்தவுடன் ஒரு கையில் விலங்கை அவிழ்க்கும் முன் ஆஜராகுங்கள் என்று எங்களில் ஒரு நபர் தள்ளிவிட்டதால் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அன்றையதினம் எங்களை போலீசார் யாரும் விசாரிக்கவில்லை. என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

6. நான் நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறான தகவலை சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**04.12.2024.** CC.172/2024 PW.3 Thiru. ஜெபின்

**கடந்த 23.10.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2024, dated 20.11.2024 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அன்றைக்கு நண்பர்கள் பார்க்க வந்ததாக சொன்னதைப் பொறுத்து நாங்கள் அனைவரும் சேர்ந்து பார்க்க முடியாது என்றுசொன்னோமா என்றால் இல்லை, S.I Madam தான் சொன்னார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்து பார்க்க முடியாது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

2. S.I Madam சொல்லும் நேரத்தில் நான் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு மேற்படி நண்பர்களை அடையாளம் காட்டமுடியும் என்றால் சரிதான். எத்தனை நண்பர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை, கூட்டமாக இருந்தார்கள். ஒரு நபர் பேசினார். நீதிமன்றத்தில் வழக்கிற்காக ஆஜராக கூடிய நபர்கள் நிறைய நபர்கள் இருந்தால் அங்கு கூட்டம் இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் நீதிமன்ற பணியை முடித்து கைதிகளை அழைத்துச் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். S.I Madam தனியாகதான் பெட்டிசன் கொடுக்க சென்றார்கள் என்றால் சரிதான்.

3. போலீசார் அன்றையதினம் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். நான் கைதிகளைஅழைத்துச்சென்ற பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். பொதுவாக நீதிமன்றத்திற்கு கைதிகளை அழைத்து வரும்போது கைவிலங்கிட்டு தான் அழைத்து வருவோம் என்றால் சரிதான். அன்றையதினம் கைவிலங்கு போடவில்லை. கைவிலங்கு போடாமல் நாங்கள் அழைத்து வந்திருந்தாலும் அது நீதிமன்ற CCTV camera வில் பதிவாகியிருக்கும் என்று சொன்னால் சரிதான்.

4. நான் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா5 மோகன் என்னுடன் தான் வந்தார் என்றால் சரிதான். மேற்படி அன்றையதினம் நடந்த சம்பவம் சம்மந்தமாக 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக ஒரு புகார் கொடுத்தார்ள ன்றால் அது எனக்கு தெரியாது. கைதிகளை முழுமையாக கண்காணிப்பது தான் எங்கள் பணி என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் போது 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன செய்திருப்பார் என்று நான் கண்காணித்திருப்பேன்

என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக தகவல் தெரிவித்திருந்தால் அதை நான் பார்த்திருப்பேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

5. அ.சா1 எழுத்துப்பூர்வமாக நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்தார் என்றால் ஆம். அதிலும் நண்பர்கள் வந்ததாக தான் சொல்லப்பட்டிருக்கும் என்றால் - ஆம். நான் சொல்வது போல் நண்பர்கள் வந்ததாக எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், நான் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைவிலங்கோடு அழைத்து வந்தபோது சிவாவின் பெயர் கூப்பிட்டவுடன் எங்களில் ஒருவர் கைவிலங்குடன் ஆஜராக பிடித்து தள்ளியதால் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதாலும், 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் இது சம்மந்தமாக நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக தகவல் தெரிவித்ததைப் பொறுத்து எங்களுக்கு பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதற்காக அ.சா1 உண்மைக்கு மாறாக புகார் கொடுத்து அதில் நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவரை கூப்பிட்டவுடன் அவர் தான் இழுத்துக்கொண்டு வந்தார். கைவிலங்கோடு தான் வந்தார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

04.12.2024. CC.172/2024 PW.4 Thiru.வினு

**கடந்த 23.10.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2024, dated 20.11.2024 ன் படி குவிமுச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>குறுக்கு விசாரணை</u> : <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அன்றைக்கு நண்பர்கள் பார்க்க வந்ததாக சொன்னதைப் பொறுத்து எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றால் 3 லிருந்து 6 பேர்கள் வந்திருப்பார்கள். வந்த நண்பர்களை அடையாளம் காட்டி என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் அடையாளம் தெரியவில்லை, விசாரித்தார்கள்.

2. உண்மையிலேயே நண்பர்கள் வந்திருந்தால் எனக்கு அவர்களை அடையாளம் தெரிந்திருக்கும் என்றால் நாங்கள் கைதிகளைப் பார்த்துக்கொண்டிருந்தோம். கைதிகளை பார்த்துக்கொண்டிருக்கும் அவர்கள் நண்பர்களையும் பார்க்க முடியும் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நண்பர்களே வராததால் தான் எனக்கு ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்சிவா நடந்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக புகார் கொடுத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் நடவடிக்கைகளை நாங்கள் கண்காணித்துக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். உண்மையிலேயே நான் கண்காணித்துக்கொண்டிருந்தால் அவர் எழுத்துப்பூர்வமாக அவர் நீதிமன்றத்தில் கொடுத்த தகவலும் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் ஒருவேளை பாத்ரூம் ஏதாவது போயிருப்போம். ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே போகமுடியும் என்றால் சரிதான். அதுபோல் அ.சா1ம் நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக தகவல் கொடுத்தார் என்றால் ஐயாவிடம் இன்பார்ம் பண்ணினார்கள். எழுத்துமூலமாக கொடுத்தார்களா என்று எனக்குத் தெரியாது.

4. அன்றையதினம் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை கைவிலங்கு போட்டு கூட்டி வந்தோமா என்றால் இல்லை. நாங்கள் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைவிலங்கோடு அழைத்து வந்தபோது சிவாவின் பெயர் கூப்பிட்டவுடன் எங்களில் ஒருவர் கைவிலங்குடன் ஆஜராக பிடித்து தள்ளியதால் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதாலும், 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் இது சம்மந்தமாக நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக தகவல் தெரிவித்ததைப் பொறுத்து எங்களுக்கு பிரச்சினை

வந்துவிடக்கூடாது என்பதற்காக அ.சா1 உண்மைக்கு மாறாக புகார் கொடுத்து அதில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவரை கூப்பிட்டவுடன் அவர் தான் இழுத்துக்கொண்டு வந்தார். கைவிலங்கோடு தான் வந்தார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் அ.சா1ஐ காப்பாற்ற வேண்டுமென்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.